**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | :Case No. | C C 362/2023 |
| **Deposition of witness for** | Prosecution<br>Defence<br>Court | P W 8 |

| | | |
|---|---|---|
| Name | : | V. பிரியா |
| Father's Name | : | விஸ்வநாதன் |
| Village | : | திருச்சி |
| Taluk | : | திருச்சி |
| Calling | : | உதவி பேராசிரியர் |
| Religion | : | இந்து |
| Age | : | 44 |

ACCUSED அசீம்கான் – ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.02.2025.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது நாகப்பட்டினம் அரசு மருத்துவகல்லூரியில் உடல் இயங்கியல் துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.10.2022 அன்று பணியில் இருந்த போது பிற்பகல் 3.30 மணியளவில் பாடாலூர் முதல்நிலை காவலர் திரு. உதயகுமார் என்பவரின் மூலம் 37 வயது மதிக்கத்தக்க ராம்பிரவேஷ்குமார் என்பவருக்கான உடற்கூறாய்வு பரிசோதனை செய்ய பாடாலூர் காவல்நிலைய ஆய்வாளரிடம் இருந்து வேண்டுகோள் கடிதம் பெறப்பட்டு காவலரோடு சென்று பிற்பகல் 04.10 மணியளவில் சவக்கிடங்கிற்கு சென்று காவலர் அடையாளம் காட்ட பிரேத பரிசோதனை மேற்கொண்ட போது நடுத்தர உடல்வாகு கொண்ட ஆண் பிரேதமாக இருந்தது. மரண விறைப்பு தன்மை இடது காலில் காணப்பட்டது. கை,கால்களின் விரல்கள் நீல நிறத்தில்

காணப்பட்டன. வயிறு, இரண்டு தொடை மற்றும் இடது காலில் மருத்துவமனை கட்டுடன் காணப்பட்டது.

<u>மரணத்திற்கு முன் ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு:</u>

1). 5 x 5 x அரை ஆழமுள்ள அறுவை சிகிச்சை செய்யப்பட்ட காயம் வலது வயிற்றின் அடிப்பகுதியில் காணப்பட்டது.

2). 17 x 4 x அரை ஆழமுள்ள காயம் வயிற்றின் நடுப்பகுதியில் தொப்புள் பகுதியிலிருந்து அடி வரை நீண்டு இருந்தது.

3). சிதைந்த காயங்கள் பின்வரும் இடங்களில் காணப்பட்டது.

அ). 20 x 6 செ.மீ. அளவிலான சிதைந்த காயம் வலது தொடையில் சீரற்ற முறையில் தசை, நரம்பு மற்றும் எலும்பு வெளியில் தெரியும் நிலையில் காணப்பட்டது.

ஆ). 13 x 9 செ.மீ. x தசை அளவிலான காயம் வலது தொடையின் மேல் பகுதியில் இருந்தது.

4). மெட்டல் பின்களால் தையல் இடப்பட்ட காயம் காயம் எண்.3 (அ)விற்கு மேலே வலது தொடையில் காணப்பட்டது.

5). 29 x 16 செ.மீட்டர் அளவிலான தோல் வலது தொடையின் முன் பகுதியிலிருந்து எடுக்கப்பட்டிருந்தது.

6). 28 x 15 செ.மீ. அளவிலான தோல் இடது தொடையில் பக்கவாட்டிலிருந்து எடுக்கப்பட்டிருந்தது.

7). மெட்டல் பின்களால் 13 செ.மீ. அளவிற்கு தையல் இடப்பட்ட காயம் வலது முழங்காலில் இருந்தது.

8). வலது காலின் கீழ்பகுதி நீக்கப்பட்டு 18 செ.மீ. அளவிலான கால் உறுப்பு மீதி இருந்தது.

9). 9 x 8 x 3 செ.மீ. அளவிலான காயம் அறுவை சிகிச்சையின் மூலம் இடது தொடையில் உருவாக்கப்பட்டிருந்தது.

10). 5 x 3 x தசை அளவிலான காயங்கள் 3, 5 வலது கால் விரல்களில் காணப்பட்டது.

11). சிவந்த பழுப்பு நிற காயங்கள் பின்வரும் இடங்களில் காணப்பட்டன.

அ). 10 x 3 செ.மீ அளவில் இடது காலின் கீழ்பகுதியில்

ஆ). 9 x 6 செ.மீ. அளவில் இடது காலின் பக்கவாட்டில்

இ). 4 x 3 செ.மீ. அளவில் இடது கணுக்காலின் கீழ்

ஈ). 3 x 2 செ.மீ. அளவில் இடது மணிக்கட்டில்

12). நீர்வடிக்குழல் இடதுபக்க வயிற்றில் பொருத்தப்பட்டிருந்தது.

13).இடது மற்றும் வலதுபுற இடுப்பு எலும்பு உடைந்து இரத்தம் வெளியேறி காணப்பட்டது.

14). இதர உறுப்புகளை அறுத்து ஆய்வு செய்கையில் இருதயம் சீராக இருந்தது. அதன் அறைகளில் இரத்தம் உறைந்த நிலையில் இருந்தது. நுரையீரல் சீராகவும் கனமாகவும் இருந்தது. அதன் வெட்டுத்தோற்றத்தில் சீழும் இரத்தமும் கலந்து காணப்பட்டது. குரல்வளை மூச்சுக்குழல், நாவடி எலும்பு சீராக இருந்தது. வயிற்று அறை சீராக இருந்தது. அதில் 50மிலி திரவம் இருந்தது. குறிப்பிடத்தக்க எந்த நெடியும் கண்டறியப்படவில்லை. கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகம் சீராகவும் வெட்டுத் தோற்றம் தோய்ந்தும் காணப்பட்டது. சிறுகுடல் சீராக இருந்தது. சிறுநீர்ப்பை காலியாகஇருந்தது. தலை, தோல், கபாலம் சீராக இருந்தது. மூளை சீராக இருந்தது. தண்டுவடம் சீராக இருந்தது.

இறுதி கருத்தாக இறந்த நபரானவர் தனக்கு ஏற்பட்ட பலதரப்பட்ட காயங்களின் விளைவுகளால் இறந்திருக்கக் கூடும் என்று கருத்து தெரிவித்து பிரேத பரிசோதனை சான்று வழங்கினேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை சான்று **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காயம்பட்ட நபர் மீது கிரேன் போன்ற வாகனம் மோதி அவரது கால் மற்றும் இடுப்பு பகுதியில் ஏறி இறங்கினால்

மேற்கண்ட காயங்கள் ஏற்பட்டு அதனால் இறப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>குறுக்கு விசாரணை:– (எதிரி தரப்பில்) இல்லை.</u>**

**ஒப்பம் /- சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**